JUDICIAL FORM NO.53
{See Rule-42}
DEPOSITION OF WITNESS
(CHATPTER XXIII CRPC).
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.
Case No.சிசி.557/2022
PW.5

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அந்தோணி ஜெயராஜ் | தாலுகா | |
| தந்தை பெயர் | | தொழில் | உதவி ஆய்வாளர் |
| கிராமம் | | வயது | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 09.06.2026

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் தற்போது சேர்ந்தமரம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் திரு.சண்முக நயினார் மற்றும் புலன் விசாரணை செய்த காவல் உதவி ஆய்வாளர் திரு.சண்முகநயினார் மற்றும் தர்மராஜ் ஆகியோர்களின் கையெழுத்தும் கையொப்பமும் நன்றாக தெரியும் நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 22.05.2017 ம் தேதி 10.30 மணிக்கு மேற்படி உதவி ஆய்வாளர் நிலைய பொறுப்பில் இருந்த போது சுமதி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண் 101/2017 இதசபிரிவுகள் 323,448,506(1) and 4 of TNPHW Act ன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். அந்த முதல் தகவலறிக்கை அசலையும் புகார் மனுவின் அசலையும் இணைத்து கணம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்துள்ளார். மற்ற நகல்களை உயர் அதிகாரி களுக்கு அனுப்பி வைத்துவிட்டு ஒரு நகலை விசாரணை அதிகாரியின் பார்வைக்கு வைத்துள்ளார். **புகார் மனு அசாஆ 2 ஆகவும் மற்றும் முதல் தகவலறிக்கை அ.சா.ஆ 3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட விசாரணை அதிகாரி 02.06.2017 ம் தேதி 07.00 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்று சாட்சிகள் குருசாமி மற்றும் பால் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தையும் அதன் சுற்றுபுறத்தையும் பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **அந்த பார்வைமகஜர் அ.சா.ஆ 4 ஆகவும் மாதிரி**

**வரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் சாட்சிகள் சுமதி, மகேஷ்வரி, சங்கரலிங்கம் பார்வை மகஜர் சாட்சிகள் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் வழக்கின் எதிரியை தேடி வந்த நிலையில் 02.06.2017 ம் தேதி கண்மணியாபுரத்தில் வைத்து கைது செய்து தக்க வழி காவல்மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். பின்பு காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் இந்திரா என்பவரை விசாரித்து காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மேற்படி **காயச்சான்று அசாஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு புலன் விசாரணை முடித்து எதிரி மீது குற்றம் உண்மையானதால் இதச பிரிவுகள் 323,448,506(1) and 4 of TNPHW Act ன் கீழ் இறுதி அறிக்கை 18.12.2017 ல் தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

நான் சொன்ன நாளில் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் புகார் வாக்குமூலம் பெற்று வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்றும், எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமுமில்லை என்று சொன்னாலும், நான் சொன்னபடி சொன்னதுபோல் எதிரிகள் கைதுசெய்யபடவில்லை என்றாலும் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் ஒரு தலைப்பட்சமாக விசாரித்து குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}
DEPOSITION OF WITNESS
(CHATPTER XXIII CRPC).
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.
Case No.சிசி.557/2022
PW.4

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அடைக்கலமுத்து | தாலுகா | கடையநல்லூர் |
| தகப்பனார் பெயர் | மாடசாமி | தொழில் | கூலி வேலை |
| கிராமம் | திருமலாபுரம் | வயது | 71 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 09.06.2026

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**முதல் விசாரணை:–**

நான் தற்போது திருமலாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். என் உறவினர். அ.சா.1 சுமதி, அ.சா.2 மகேஷ்வரி, அசா.3 சங்கரலிங்கம் ஆகியோர்களை தெரியும். இந்த வழக்கு சம்பவம் பற்றி நேரடியாக எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு பிறழ்சாட்சியாக விசாரிக்கப்பட்டது.

போலிசார் விசாரணையின் போது கடந்த 21.05.2017 ம் தேதியன்று இரவு 08.30 மணியளவில் ஆஜர் எதிரி அ.சா.1 ன் வீட்டிற்குள் அத்து மீறி நுழைந்தார் என்றால் சரியல்ல. அ.சா.1 யை பெண் என்றும் பாராமல் பொது இடத்தில் வைத்து அசிங்கமாக பேசினார் என்றால் சரியல்ல, அ.சா.1, அ.சா.2 மற்றும் என்னையும் அடித்து காயப்படுத்தினார் என்றால் சரியல்ல. அ.சா.1, அ.சா.2 க்கு கொலை மிரட்டல் விடுத்தார் என்றால் சரியல்ல. சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றால் சரியல்ல. மேற்படி விசயம் உண்மை என்றாலும், தற்போது எதிரியுடன் அ.சா.1, அ.சா.2 சமாதானமாக சென்றுவிட்டதால் இவ்வழக்கிலிருந்து விடுவிக்க உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi